குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ), ஓமலூர்.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07–ஆம் நாள் செவ்வாய்கிழமை

CMP No: 275/2026
in
Cr.No.277/2026
in
(தாரமங்கலம் காவல்நிலையம்)

திரு.நப்பல்கான்(எ)நெனபல்கான்,
த/பெ.சேகு பெரிய நைனார்,
கதவு எண்.5/491,
அழகுசமுத்திரம்,
கருக்கல்வாடி,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

....மனுதாரர்/வாகன உரிமையாளர்

//எதிர்//

காவல் உதவி ஆய்வாளர்,
தாரமங்கலம் காவல் நிலையம்,
சேலம் மாவட்டம்.

குற்ற எண்.277/2026.

U/s.7, 20(ii) COTPA Act 2003 r/w 275, 123,62 BNS 2023.

. ...எதிர்மனுதாரர்

இம்மனுவானது 02.07.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.S.கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**உத்தரவு**

இம்மனுவானது பிரிவுகள் 497 BNSS– ன் கீழ் மனுவின் பட்டியலில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை காவல் துறையிடமிருந்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், நீதிமன்றத்திலிருந்து முழு பாதுகாப்புக்காக மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:40:12 +0530

**<u>மனுவின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கின் மனுதாரர் நப்பல்கான்(எ)நெனபல்கான் ஆவார். கடந்த 17.05.2026ம் தேதி காலை 08.00 மணிக்கு TN 30 CW 0623 என்ற பதிவு எண் கொண்ட SUZUKI ACCESS என்ற வாகனத்தில் எதிர்மனுதாரர் காவல்நிலையம், கருக்கல்வாடி பேருந்து நிறுத்தம் அருகே வாகனத்தை தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தனது வாகனத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை போதை பொருட்களை கைப்பற்றியதாகவும், எதிர்மனுதாரர் தீவட்டிப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.277/2026 U/s.7, 20(ii) COTPA Act 2003 r/w 275, 123, 62 BNS 2023, என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கு சொத்தான வாகனம் தன் வசம் ஒப்படைத்தால் வழக்கு முடியும் வரை எவ்வித பாராதீனமும் செய்ய மாட்டேன் என்றும், அதன் நிறத்தையும் தன்மையையும் மாற்ற மாட்டேன் என்றும், தனது வாகனம் திறந்த வெளியில் நின்று இருப்பதால் அதன் நுண்ணிய பாகங்கள் பழுதடைந்து பயன்படுத்தா நிலைக்கு போய்விடும் என்றும், மனுதாரர் இவ்வழக்கு சொத்து தனக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகலை சமர்ப்பித்துள்ளார் என்றும், மேலும் எதிர்மனுதாரர் காவல்நிலையம் கைப்பற்றுதல் மகஜரை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். மேற்படி வாகனத்தை இடைக்காலப் பொறுப்பில் மனுதாரிடம் ஒப்படைக்க வேண்டப்படுகிறது.

**<u>அரசு தரப்பின் பதில்:</u>**

எதிர்மனுதாரர் காவல் நிலையம் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு சொத்தான வாகனம் TN 30 CW 0623 என்ற பதிவு எண் கொண்ட SUZUKI ACCESS என்ற வாகனத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டால் மீண்டும் இதே போன்று குற்றச்செயலை செய்வார் என்றும், இந்த வாகனம் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டால் வழக்கு விசாரனையின் போது ஆஜர்படுத்தாமல் தலைமறைவு ஆகிடுவார் என்றும், மேலும் வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ வாய்ப்பு உள்ளதாலும், எதிர்மனுதாரர் தரப்பில் வலுவான ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது.

**<u>தீர்வு:</u>**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது; கடந்த 17.05.2026ம் தேதி காலை 08.00 மணிக்கு TN 30 CW 0623 என்ற பதிவு எண் கொண்ட SUZUKI ACCESS என்ற வாகனத்தில் எதிர்மனுதாரர் காவல்நிலையம், கருக்கல்வாடி பேருந்து நிறுத்தம் அருகே வாகனத்தை தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தனது வாகனத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை போதை பொருட்களை கைப்பற்றியதாகவும், எதிர்மனுதாரர்

SADHAMHUSAIN S Digitally signed by SADHAMHUSAIN S Date: 2026.07.07 16:40:18 +0530

தீவட்டிப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.277/2026 U/s.7, 20(ii) COTPA Act 2003 r/w 275, 123, 62 BNS 2023, என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றிய வழக்கு சொத்தான TN 30 CW 0623 என்ற பதிவு எண் கொண்ட SUZUKI ACCESS என்ற வாகனத்தை கைப்பற்றியுள்ளார். மேற்படி இவ்வழக்குச்சொத்து மனுதாரர் தனக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க மேற்படி பிரமாண வாக்குமூலம், வாகனத்தின் பதிவு சான்றின் நகல், ஆதார் அட்டை நகலையும் சமர்ப்பித்துள்ளார். மேற்படி மேற்படி ஆவணங்களையும், பதில் உரையையும் பரிசீலித்ததில் மனுதாரர் தான் இந்த மனுவில் கூறப்பட்டுள்ள சொத்துக்களுக்கு உரிமையாளர் என்பது முதல் தோற்றமாக காண முடிகிறது. இவ்வழக்கு சொத்து 17.06.2026ம் தேதி கைப்பற்றப்பட்ட போதிலும் தற்போது வரை வழக்கு சொத்துகள் குறித்து வேறு யாரும் உரிமை கோரி மனுதாக்கல் செய்யவில்லை மனுதாரர் தனது வாகனம் பயன்படுத்தாமல் இருப்பதால் அதன் நுண்ணிய பாகங்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு போய்விடும் என்றும், வாகனம் தன் வசம் ஒப்படைத்தால் வழக்கு முடியும் வரை எவ்வித பாராதீனமும் செய்ய மாட்டேன் என்று உறுதி அளித்துள்ளார். இந்நிலையில் இவ்வழக்கு சொத்தான வாகனம் அதன் உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பது நீதிக்கு உகந்து என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

பொதுவாக, இது போன்ற மனுக்களில் நீதிமன்றம் யார் உரிமையாளர் என்று நீண்ட நெடிய விசாரணை நடத்துவதில்லை, ஆனால் சொத்துக்களை மனுதாரரிடம் ஒப்படைப்பதற்கு முதல் தோற்ற வழக்கு இருக்கிறதா என்று தான் பார்க்கப்படும். மனுதாரர் சமர்பித்துள்ள ஆவணத்தையும் இவ்வழக்கு மனுதாரர் நப்பல்கான்(எ)நெனபல்கான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தையும் பரிசீலித்ததில் மனுதாரர் தான் இவ்வழக்கு சொத்தான வாகனத்தின் உரிமையாளர் என்று தெரிய வருகிறது. இந்த மனுவில் மனுதாரர் வழக்கு சொத்துக்களை அவரிடம் இடைக்கால பொறுப்பில் தருவதற்கு வழக்கு சொத்தின் மீதான தனது உரிமையை நிரூபித்துள்ளதாகவே இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. இந்நிலையில் இவ்வழக்கு சொத்தான வாகனத்தை அதன் உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பது நீதிக்கு உகந்து என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. **Sunderbhai Ambalal Desai vs. State of Gujarat, 2002 10 SCC 283** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை கருத்தில் கொண்டும், மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டும் இந்த நீதிமன்றம் இந்த மனுவை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:40:21 +0530

**<u>நிபந்தனைகள்:</u>**

1. எதிர்மனுதாரர் காவல் நிலையம் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள TN 30 CW 0623 என்ற பதிவு எண் கொண்ட SUZUKI ACCESS வாகனத்தின் (Engine No.AF212811229, Chasis No.MB8DP12DDN8B39998) என்ற வாகனத்தை கைப்பற்றி இருக்கும் பட்சத்தில், நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான CP No. என்ற எண் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. மனுதாரர் ரூ.10,000/-(பத்தாயிரம்) பிணை பத்திரம் எழுதி தர வேண்டும். மேலும் அதே தொகைக்கு இரு தனிநபர் பிணை பத்திரம் எழுதி தர வேண்டும்.

3. மனுதாரர் தனது ஆதார் அட்டை நகலினையும், குடும்ப அட்டை நகலினையும் தாக்கல் செய்ய வேண்டும். உடன் மனுதாரரும், ஜமீன்தாரரும் தற்போதைய பாஸ்போர்ட் அளவு புகைப்படமும் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

4.மனுதாரர் மேற்படி வாகனத்தின் அசல் பதிவு சான்றினை இந்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. மனுதாரரிடம் வழக்கு சொத்துக்கள் ஒப்படைக்கப்படும் முன்பு அவற்றின் 4 திசை புகைப்படங்கள் எடுக்கப்பட்டு அவற்றில் மனுதாரர், இந்த நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் ஆகியோர்கள் சான்றொப்பமிட வேண்டும்.

6. மனுதாரர் நீதிமன்றம் வேண்டும் போது, இந்த மனுவினால் கொடுக்கப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

7. இந்த நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் பிரிவு 257(1) குற்றவியல் நடைமுறை விதிகளின் படி பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சர்க்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுலை செவ்வாய்கிழமை 07 -ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:40:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.